சட்டத்தின்பால் நடக்க வேண்டும் என்று நீதி போதனைகள் சொல்வதைப் போல சட்டத்தையும் மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும். அந்த வகையிலே சட்டத்தை ஒரு பாடமாக வைக்க இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் சட்டத்தை பாடத் திட்டத்தில் படிப்பது என்பது வேறு. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறையில், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையில் இருக்கின்ற மாணவர்களுக்கு பாடத் திட்டத்திலே சில பகுதிகளைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

பகுதி நேர நியாய விலைக் கடை

***3261—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் வட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் வாலாஜாபாத் வட்டம், கே.எஸ்.பி நகர், குருவிமலை பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

2018 ஜூன் 27]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், களியாம்பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மேட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்த 62 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 388 குடும்ப அட்டைகளுடன் காரணிமண்டபத்தில் முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைகளின்படி மேட்டுப்பாளையம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், களக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கே.எஸ்.பி. நகர் பகுதியைச் சேர்ந்த 165 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 677 குடும்ப அட்டைகளுடன் குருவிமலை பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் குருவிமலை பகுதியில் மேலும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை. அரசு விதிகளின்படி ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையைப் பிரித்து, மற்றொரு பகுதி நேர நியாய விலைக் கடையைத் துவக்க இயலாத நிலைமை இருக்கிறது. எனினும், சிறப்பினமாகக் கருதி, கே.எஸ்.பி. நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதி நன்றிதான் சொல்லக்கூடிய வகையில் உள்ளது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கே.எஸ்.பி. நகரில், சிறப்பு விதியின்கீழ் கூடுதலாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி. அதைப்போல, மேட்டுப்பாளையம் பகுதியில் 62 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதோடு காரணை என்கின்ற பகுதியில் 107 குடும்ப அட்டைகள் உள்ளன. நரிக்குறவர்கள் வாழும் பகுதியில் 47 குடும்ப அட்டைகள்*

உள்ளன. இந்த மூன்றையும் சேர்க்க வேண்டும். நரிக்குறவர்கள் தற்பொழுது 2 கி.மீ. தூரம் சென்று வயலூரில் உள்ள நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கக்கூடிய நிலைமை உள்ளது. எனவே, அந்த நிலையை மாற்றி, மேட்டுப்பாளையம் பகுதியில் இருக்கின்ற 62 குடும்ப அட்டைகள், நரிக்குறவர்கள் வாழும் பகுதியில் இருக்கின்ற 47 குடும்ப அட்டைகள் மற்றும் காரணையில் இருக்கின்ற 107 குடும்ப அட்டைகளையும் சேர்த்தால், 216 குடும்ப அட்டைகள் உள்ளன. எனவே, மேட்டுப்பாளையத்தை மையமாக வைத்து, அங்கே பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்பதுதான் இந்தக் கேள்வியின் நோக்கம். குறிப்பாக, இரண்டு பகுதிகளிலும் நரிக்குறவர்கள் இருக்கிறார்கள். நரிக்குறவர்களின் நலனுக்காகத்தான் இந்த இரண்டு பகுதிகளையும் இணைத்து கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையம் பகுதியிலே பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விதியின்படி, ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இருந்தாலும் சில அசாதாரண சூழ்நிலை ஏற்படும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, நாடோடி மக்களான நரிக்குறவ மக்கள் வாழ்கிற பகுதியாக இருந்தால் குடும்ப அட்டைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் சிறப்பினமாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கோரிக்கை வைக்கும்பட்சத்தில், அதை சிறப்பினமாகக் கருதி, பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை

2018 ஜூன் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே மக்களுடைய குறைகளைக் கேட்கின்றபொழுது நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடங்களைக் கட்டுகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. இதில் உத்திரமேரூர் பேரூராட்சியில் 16-12-2012 அன்றே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கு நியாய விலைக் கடை இதுவரை வரவில்லை. அதாவது* Muthukrishna Avenue *என்கிற பகுதியில் அந்தக் கட்டடம் இருக்கின்றது.*

முற்பகல் 10-15

அரசு நகர், டான்ஸ்பேட்டை மூன்று தெருக்கள், கொல்லமேட்டு தெரு, கீழண்டை தெரு, மேலண்டை தெரு என இரண்டு தெருக்கள், ரைஸ் மில் சந்து மற்றும் புதிதாகக் கட்டியிருக்கின்ற கடையை ஒட்டியிருக்கின்ற பகுதியில் இருக்கின்ற 300 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, அங்கே கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடம் பயன்பாட்டிற்கு வருகின்ற வகையில், பகுதி நேர நியாய விலைக் கடையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களா, அந்த மூன்று கடைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களே வந்து துவக்கி வைத்து, அறிவியல்பூர்வமாக ஆலோசனைகளை வழங்குவார்களா என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அறிவியல்பூர்வமாக சொல்வதற்கு ஒன்றும் இல்லை. அந்தக் கடை*

கட்டப்பட்டிருந்தால், அந்தக் கடையை கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்திருக்க வேண்டும். அந்தக் கடைக்கு மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கும் அல்லது அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் ஏதேனும் எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். ஆக, இதுபோன்ற காரணங்கள் இல்லாதபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, உறுதியாக, உடனடியாக கடையைத் திறப்பதற்கு உண்டான நடவடிக்கைகள் நிச்சயமாக துறை ரீதியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்அவர்கள்.*

224—

மின்சாரம் தயாரித்தல்

***9806—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, இராமையன்பட்டி ஊராட்சியில் உள்ள குப்பை சேமிப்புக் கிடங்கில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சியின் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அது நகராட்சி நிருவாகத்தினரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஆகவே, அது மின் துறையின் ஆய்வில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், இருக்கையில் இல்லை.*